மாகாண கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

மாகாண மட்ட பொதுப் பரீட்சை
க.பொ.த. உயர்தரம் –2018– நவம்பர்

09 T I

உயிரியல் I | தரம் 13 - (2019) | இரண்டு மணித்தியாலங்கள்

* இவ்வினாத்தாள் 09 பக்கங்களை உடையது
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக பின்பற்றுக.
* 01 தொடக்கம் 50 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் (1),(2),(3),(4),(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அலல்து மிகப்பொருத்தமான விடையைத் தொரிவு செய்து விடைத்தாளில் புள்ளடி (X) இடுக.

1. உயிருள்ள பொருட்களில் 96% ஆக்கும் மூலகங்களின் கூட்டம் எது?

1. O, C, H, N 2. Ca, P, K, S 3. B, Co, Cu, Cr 4. O, C, H, 5. O, C, N, P

2. பின்வரும் இயல்புகளில் எது புவியில் உயிரைப் பராமரிப்பதில் உள்ளடக்கப்படும் பிரதான இயல்பாகக் கருதமுடியாதது?

1. பிணைவுக்ரிய நடத்தை 2. வெப்பநிலை சீராக்கும் ஆற்றல்
3. உறையும் போது விரிவடைதல் 4. பல்வல்லமைக்குரிய கரைக்கும் இயல்பு
5. மேற்பரப்பு இழுவிசை

3. பின்வரும் பல்சக்கரைட்டுக்கள் அவற்றின் தொழில் தொடர்பான கூற்றுக்களில் **தவறான** இணைப்பு எது?

1. மாப்பொருள் - தாவரங்களின் சேமிப்பு உணவு
2. அரைச்செலுலோசு- கலச்சுவர் நடுமென்றட்டு கூறு
3. கிளைக்கோஜன் - பங்கசுக்களின் சேமிப்பு உணவு
4. கைற்றின் - புறவன்கூட்டின் கூறு
5. இனூலின் - தாவரத்தின் சேமிப்பு உணவு

4. புரதம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது **தவறானது?**

1. அமினோ அமிலங்களைக் கொண்டவை
2. C,H,O,N, S, மூலக ஆக்கக் கூறாகக் கொண்டவை
3. வெப்பப்படுத்தலில் மீளக்கூடியவகையில் தற்சிறப்பான முப்பரிமான கட்டமைப்பை இழக்கும்
4. அழுகலகற்றிகள் அவற்றின் கட்டமைப்பை பாதிக்கும்
5. குருதிபாய அல்பியுமின் கொழுப்பமிலங்களைக் கடத்தும்

5. நியுக்கிளிக்கமிலங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது **தவறானது**

1. DNA வெல்ல பொஸ்பேற்று முதுகெலும்பைக் கொண்டது
2. செய்திகாவும் RNA மிகக் குறைவாகக் காணப்படும் RNA
3. DNA இழைகள் ஒன்றுடன் ஒன்று பொஸ்போடைஸ்ரர் பிணைப்பால் பற்றப்பட்டது
4. RNA இல் உள்ள பியுரின்கள் அடினின் , குவானின்
5. நியுக்கிளிக்கமிலங்கள் நேரிய பல்பகுதியங்களாகும்

www.aswarphysics.weebly.com

6. இலத்திரன் நுணுக்குக்காட்டியில் இருந்து ஒளிநுணுக்குக்காட்டி வேறுபடுவது ஏனனில்

1. அது வலுவான காந்தங்களைக் கொண்டுள்ளதால்
2. உயிருள்ள பொருட்களை மட்டும் அவதானிக்க முடியும் என்பதால்
3. உண்மை நிறத்தை அவதானிக்க முடியாது என்பதால்
4. உயிருள்ள, உயிரற்ற பொருட்களை அவதானிக்க முடியும் என்பதால்
5. நுண்வரைபடங்கள் பயன்படுத்தப்படும்

7. பின்வரும் இயல்புகளில் எது புரோகரியோட்டா, இயூகரியோட்டா கலங்கள் இரண்டிற்கும் பொதுவானது?

1. நிறமூர்த்தம் 2. கரு 3. இறைபோசோம் 4. கலமென்சவ்வு 5. குழியவன்கூடு

8. வினாக்கள் 8 -9 வரை கீழ் குறிப்பிட்ட கலப் புன்னங்கங்களை அடிப்படையாகக் கொண்டவை

A B C D E



8. மேலுள்ள கலப்புன்னங்கங்களின் **தவறான** தொழிலைக் கொண்டது

1. A – காபோவைதரேற்று அனுசேபம்
2. B - கிளைக்கோபுரதத் தொகுப்பு
3. C - கலச் சுவாசத்துடன் தொடர்புடையது
4. D -ஒளித்தொகுப்பு
5. E -RNA தொகுப்பு

9. கீழே தரப்பட்ட கலச்சுவர் தொடர்பான கூற்றுக்களில் **தவறானது** எது?

1. முதற் கலச்சுவர் செலுலோசு, பெக்ரினால் ஆக்கப்பட்டது
2. முதல் கலச்சுவரின் வெளிப்புறமாக மெல்லிய பெக்ரின் படை உண்டு
3. வீக்கத்தின் போது உடைதலைத் தடுக்கும்
4. முதல் சுவரின் வெளிப்புறமாக துணைச்சுவர் படியும்
5. கலச்சுவரிலுள்ள குழிகளின் ஊடாக அயற்கலங்களின் குழியவுரு முதலுருணைப்பினால் இணையும்

10. இயூகரியோட்டாக் கலவட்டத்தில் எந்த அவத்தையில் புன்மையத்திகள் இரட்டிப்படையும்?

1. முன் அவத்தை 2. இடை அவத்தை 3. ஈற்றவத்தை 4. அனுஅவத்தை 5. மேன்முக அவத்தை

11. ஒடுக்கற்பிரிவில் இருந்து இழையுருப்பிரிவு வேறுபடுவது ஏனெனில்,

1. அது பாரம்பரிய மாறலை தோற்றுவிக்கும்
2. இலிங்கமுறை இனப்பெருக்கமடையும் இனங்களில் நிறமூர்த்த எண்ணிக்கையை மாறிலியாகப் பேணும்
3. அது பாரம்பரிய உறுதிநிலையைப் பேணும்
4. அது சுயாதீன தனிமைப்படுத்துகையைக் கொண்டிருப்பதால்
5. அது மீளச் சேர்க்கைச் செயல்முறையைக் கொண்டிருப்பதால்

12. நொதிய நிரோதிகள் தொடர்பாக கீழே குறிப்பிட்ட கூற்றுக்களில் **தவறானது** எது?

1. ஒரு நிரோதி தற்காலிகமாக நொதிய மூலக்கூறுகளுடன் இணையலாம்
2. ஒரு நிரோதி நிரந்தரமாக நொதிய மூலக்கூறுகளுடன் இணையலாம்
3. தொட்சின் மீளமுடியாத நிரோதியாக தொழிற்பட முடியும்
4. நுண்ணங்கிகளுக்கு எதிரான மருந்துகள் மீளக்கூடிய நிரோதியாக தொழிற்பட முடியும்
5. போட்டியல்லாத நிரோதி நொதியங்களின் உயிர்பு தானத்திற்கு போட்டியிடும்

www.aswarphysics.weebly.com

13. கலச்சுவாசம் தொடர்பான கூற்றுக்களில் **தவறானது** எது?

1. காற்றிச் சுவாசத்தில் பைருவேற்று மூலக்கூறுகள் இழைமணியினுள் உயிர்ப்பாகச் செல்லும்
2. குழியவுருவில் காபொட்சி நீக்கல் செயல்முறை மூலம் பைருவேற்று அசற்றைலாக மாற்றப்படும்
3. இழைமணி முகடு, தாயத்தில் NADH ஒட்சியேற்றம் நடைபெறும்
4. குழியவுருவில் அசற்றல்டிகைட்டு NADH இனால் தாழ்த்தப்படும்
5. இழைமணி முகட்டில் $FADH_2$ ஒட்சியேற்றம் நடைபெறும்.

14. பின்வரும் ஒளித்தொகுதி தொடர்பான கூற்றுக்களில் **தவறானது** எது

1. ஒரு ஒளித்தொகுதி தாக்கமையத்தைக் கொண்டது
2. ஒரு ஒளித்தொகுதி ஒளிபற்றும் சிக்கலைக் கொண்டது
3. வெவ்வேறு அலைநீள ஒளியை உறிஞ்சுவதால் ஒளித்தொகுதிகள் இரண்டு வகைப்படும்
4. ஒளித்தொகுதி II 700 nm அலைநீள ஒளியை உறிஞ்சும்
5. ஒளியினால் ஒளித்தொகுதி அரிட்டப்பட்டு ATP, NADPH தொகுக்கப்படும்

15. பாரம்பரியத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றம் கூர்ப்பு என வரையறுக்கப்படும்

பின்வரும் கூர்ப்பு தொடர்பான கூற்றுக்களில் எது / எவை சரியானது/ சரியானவை

a. தலைமுறை, தலைமுறையாக நடைபெறும்
b. நீண்ட காலத்திற்குரியது
c. தனியொரு அங்கியில் நடைபெறும்
d. ஒரு குடித்தொகையில் நிகழும்

1. a, b மட்டும்
2. a, b, c மட்டும்
3. a, b, d மட்டும்
4. a, , b, c மட்டும
5. c, d மட்டும்

16. பாகுபாடு தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க

1. அங்கிகளை முதலாவதாக பாகுபாடுபடுத்தியவர் லீனியஸ் ஆவார்
2. வாழிடங்களுக்கு ஏற்ப தாவரங்களை கெக்கேல் பாகுபாடுபடுத்தியவர் ஆவார்
3. இராச்சியம் புரோட்டிஸ்ராவை தியோபரட்டஸ் அறிமுகப்படுத்தியவர்
4. இயூகரியோட்டா, புரோகரியோட்டா தாவர விலங்குகள் என R. H வைற்றோக்கர் பிரித்தார்
5. மூன்று பெருஇராச்சியங்களை கார்ல் வூஸ் அறிமுகபடுத்தியவர் ஆவார்

17. பின்வருவனவற்றுள் எது சயனோபற்றீரியாக்களின் இயல்பு **அல்லாதது**?

1. வளிமண்டல நைதரசன் பதிக்கும் ஆற்றல்
2. இரசாயன தொகுப்புக்குரியவை
3. புரோகரியோட்டாவுக்குரியவை
4. ஒளித்தொகுப்பிற்குரியவை
5. தனிக்கலத்திற்குரியவை/ இழையுருவானவை

வினாக்கள் 18 – 19 வரை தரப்பட்ட புரோட்டிஸ்ராக்களை அடிப்படையாகக் கொண்டவை

18. எது தரப்பட்ட புரோட்டிஸ்ராக்களின் சரியான ஒழுங்கு?

a


b


c


d


1. *Euglena,* Diatom, *Amoeba, Paramecium*
2. *Paramecium, Euglena,* Diatom, *Amoeba*
3. *Paramecium, Amoeba,* Diatom, *Euglena*
4. Diatom, *Euglena, Amoeba, Paramecium*
5. *Amoeba, Paramecium,* Diatom, *Euglena*

19. எது கண்ணாடி போன்ற இரண்டு மேற்பொருந்துகையடைந்த கலச்சுவரைக் கொண்டது?

1. Paramecium
2. Amoeba
3. Diatom
4. Euglena
5. *Paramecium* உம் Diatom உம்



www.aswarphysics.weebly.com

20. பின்வரும் *Lycopodium* தொடர்பான இயல்புகளில் தனித்துவமற்றது எது?

1. வித்தித்தாவரம் ஆட்சிக்குரியது
2. தண்டு இணைக்கவர் கிளை கொண்டது
3. இனப்பெருக்க கட்டமைப்பான கூம்பி கொண்டது
4. ஓரின வித்திக்குரியது
5. புணரித்தாவரங்கள் வேறுபாடற்றவை

21. உடற்குழியுடைய, இருபக்கச் சமச்சீர் கொண்ட பரிசக்கொம்புகளுடைய வயிற்றுப்புற இதயமற்ற இயல்புகளுடன் பின்வருவனவற்றில் எவ் இயல்பு காணப்பட முடியும்?

1. முட்கள் 2. நரம்பு வளையம் 3. உணர்கொம்புகள் 4. பூக்கள் 5. நுண்சூர்கள்

சில பங்கசுக்களின் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன

a. கோணிகளை உருவாக்குதல்
b. நுகவித்திகளை உருவாக்குதல்
c. கோணிக்கனிகளை உருவாக்குதல்
d. சிற்றடியை உருவாக்குதல்
e. கோணிகளில் வித்தி காணப்படுதல்

22. மேலே குறிப்பிட்ட இயல்புகள் எவை *Penicillium* இன் இலிங்கமுறை இனப்பெருக்கத்துடன் தொடர்புடையது

1. a, b 2. b,c 3. c,d 4. d, e 5. c, e

23. பின்வரும் விலங்குகளில் எது வாயினுள் நுண்ணிய கைற்றின் பற்களைக் கொண்ட பட்டியைக் கொண்டது

1. மட்டி 2. லீச் அட்டை 3. முத்துச்சிப்பி 4. கணவாய் 5. பட்டிப்புழு

24. பின்வரும் காழ்கலன் தொடர்பான இயல்புகளில் சரியானது எது?

1. குழியவுரு சுற்றயலுக்குரிய மெல்லியதாக ஒடுக்கப்பட்டது
2. காழ்கலன்கள் முனைக்கு முனை இணைந்த துளையிடப்பட்ட தட்டுக்களைக் கொண்டது
3. உணவு துளையிடப்பட்ட தட்டினூடாக சுயமாக அசையும்
4. மூலங்கள் முதலுரு இணைப்பால் இணைக்கப்பட்டது
5. காழ்கலன்கள் முனைக்கு முனை இணைந்த நெய்யரி தட்டுக்களைக் கொண்டது

25. தரப்பட்ட வரிபடம் கொண்டிருப்பது



1. வல்லுருக்கலவிழையத்தாலான பரிவட்டவுறையை
2. பக்கவேரை உருவாக்கும் கலன்கட்டுக்களை
3. பக்கவேரை உருவாக்கும் பரிவட்டவுறையை
4. கலன்கட்டின் மத்தியில் அமைந்த உரியத்தை
5. கலன்கட்டின் மையத்திலமைந்த புடைக்கலவிழையத்தை

26. பின்வரும் இருவித்திலைத் தாவர தண்டின் துணைவளர்ச்சி தொடர்பான கூற்றுக்களில் **தவறானது** எது?

1. பக்கப்பிரியிழையம் புதிய கலங்களை உருவாக்கும்
2. அது அனேக பல்லாண்டுக்குரிய இருவித்திலைத் தாவர இனங்களில் தோன்றும்
3. கலன்மாறிழையம் துணைக்காழை உருவாக்கும்
4. துணையான கலனிழையம் தக்கைமாறிழையத்தால் உருவாக்கப்படும்
5. துணையான, முதலான வளர்ச்சி ஒரே சமயத்தில் நடைபெறலாம்



www.aswathphysics.weebly.com

இலைவாய் திறந்து மூடும் பொறிமுறையுடன் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன

a. காவற்கலங்களில் இருந்து $K^+$ இழக்கப்படுவதால் இலைவாய் மூடும்
b. காவற்கலங்களினுள் $K^+$ செறிவடைவதற்கு சக்தி தேவை
c. பகலில் காவற்கலங்களின் வீக்க அமுத்தம் குறைவடைகிறது
d. தகைப்பு இலைவாயைத் திறக்கச் செய்யும்
e. $K^+$ உட்பாய்ச்சலில் அப்சிசிக்கமிலம் பிரதான பங்களிப்புச் செய்யும்

27. மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை

1. a, b, c  2. a, b, e  3. a, c, e  4. b, c, e  5. c, d, e

28. பின்வரும் கூற்றுக்களில் எது தாவரங்களில் நடைபெறும் **திணிவு பாய்ச்சலை** விளக்குகிறது?

1. முனைவுள்ள பதார்த்தங்களினால் நடைபெறும் நீர் மூலக்கூறுகளின் பௌதிக புறத்துறிஞ்சலை
2. தேர்வு புகவிடும் மென்சவ்வின் ஊடாக நடைபெறும் நீர்மூலக்கூறுகளின் சுயாதீன பரவலை
3. அமுக்க படித்திறனுக்கேற்ப நடைபெறும் திரவத்தினதும், பதார்த்தங்களினதும் அசைவை
4. மூலக்கூறுகளின் செறிவு கூடிய இடத்திலிருந்து செறிவு குறைந்த இடத்திற்கு நடைபெறும் பரவலை
5. நீர்/ முனைவுள்ள கரையங்களின் மென்சவ்விற்கு குறுக்காக நடைபெறும் உயிர்ப்பற்ற அசைவை

29. கலம் ஒன்றை கரைசலினுள் இட்டால் நீர் அசையும் திசை முதலுருவத்தினதும், கலப்புற கரைசலினதும் நீர் அழுத்தத்தில் தங்கியிருக்கும். பின்வரும் கூற்றுக்களில் எது **தவறானது?**

1. முற்றாக முதலுரு சுருங்கிய கலத்தின் நீர் அழுத்தம் பூச்சியமாகும்
2. முதலுரு சுருக்கமடையும் போது கலம் ஒன்றிலிருந்து நீர் இழக்கப்படுகிறது
3. அமுக்கமுத்தம் பூச்சியமாகும் போது கரையமுத்தம் நீர் அழுத்தத்திற்கு சமமாக மாறும்
4. கரையம் சேர்க்கப்படுதல் நேர் பெறுமானத்தை அதிகரிக்கும்
5. நீர் அழுத்தம் வழமையாக Mpa இல் அளவிடப்படும்

30. பின்வருவனவற்றில் எது தாவரங்களில் நடைபெறும் மென்சவ்விற்கு குறுக்கான பாதையை விளக்குகிறது?

1. மென்சவ்விற்கு குறுக்காக கரையங்கள் ஒரு கலத்திலிருந்து மற்றைய கலத்திற்கு வெளியேறும்
2. உயிருள்ள கலங்களின் முழுமையான குழியத்திரவ பாதையை உள்ளடக்கும்
3. கலமென்சவ்விற்கு புறம்பான அனைத்தையும் உள்ளடக்கும்
4. மூன்று பாதைகளிலும் அதுவே விரைவானது
5. நீரும் கனியுப்புக்களும் உயிர்ப்பாகக் கடத்தப்படும்

31. உரியக் கடத்தல் பொறிமுறையில் எது நடைபெறாது?

1. தாழியில் சுக்குரோசு சுமையிறக்கப்படுதல்
2. நெய்யரிகுழாயில் சுக்குரோசு சுமையேற்றப்படுதல் நெய்யரிகுழாயில் நீர் அழுத்தத்தை அதிகரிக்கும்
3. நெய்யரி குழாயினால் நீர் உள்ளெடுத்தல் கலச்சாறை அதனூடாக பாயச்செய்யும்
4. தாழியில் நெய்யரிகுழாயிலிருந்து காழினுள் நீரை இழக்கச் செய்யும்
5. தாழியில் வெல்லம் கரையும் பல்பகுதியமாக மாற்றமடையலாம்

32. போசணை உதாரணம் தொடர்பான **தவறான** இணைப்பை தெரிவு செய்க

1. தற்போசணை - சயனோபற்றீரியா
2. ஒன்றுக்கொன்று துணையாகும் தன்மை - அவரைத் தாவர வேர்முடிச்சு *Rhizobium*
3. ஓரட்டில் உண்ணல் - மேலொட்டி ஓக்கிட்டுக்கள்
4. ஒட்டுண்ணி - *Cuscuta*
5. விசேட போசணை - *Loranthus*



www.aswarphysics.weebly.com

33. தொடுப்பிழையத்தின் தொழில் **அல்லாதது** எது?

1. கட்டமைப்புக்குரிய ஆதாரத்தை வழங்குதல்    2. ஓமோனை சுரத்தல்

3. பதார்த்தங்களின் கடத்தல்    3. கடத்திலி    5. பாதுகாப்பு வழங்குதல்

34. மனித உணவுக்கால்வாயுடன் தொடர்பான கூற்றுக்களில் எது **தவறானது?**

1. உதரச்சுரப்பி பிரதான கலங்களைக் கொண்டிருக்கும் அது பெப்சினோசனையும், HCl யும் சுரக்கும்
2. சில மருந்துகளும் , நீரும் இரைப்பையில் அகத்துறிஞ்சப்படும்
3. இடைச்சிறுகுடல் பிரதான அகத்துறிஞ்சலுக்குரியது, அதிக சடைமுளைகள் மேற்பரப்பை அதிகரிக்கும்
4. நியுக்கிளிக்கமிலங்களின் சமிபாட்டிற்கு இரண்டு நீர்ப்பகுப்பு நொதியங்கள் தேவை
5. ஈரல் நொதியங்கள் எதனையும் சுரப்பதில்லை, கொழுப்பு சமிபாட்டில் உதவும்

35. ஈரல் தொடர்பான **தவறான** கூற்று எது?

1. ஈரல் கலங்களின் நிரல்களுக்கிடையே பித்தசிறு கான் காணப்படும்
2. அது காபோவைதரேற்றுக்களின் அனுசேபத்தை நிகழ்த்தும்
3. அது அனேக சிறுசோணைகளைக்கொண்டது
4. குடாப்போலிச் சுவரிலுள்ள கப்பரின் கலங்கள் (Kuffer's cells) யூரியாவைச் சுரக்கும்
5. அது மனித உடலின் பெரிய சுரப்பியாகும்

36. இதய வட்டம்

1. 0.4 செக்கன்கள் நீடிக்கும்
2. அது ஒரு முற்றான இதய அடிப்பின் தொடரான நிகழ்வுகளைக் கொண்டது
3. முற்றான இதயத்தளர்வு 0.4 செக்கன்கள் நீடிக்கும்
4. இதயத்தளர்வின் போது சிறியளவு குருதி இதயவறைகளினுள் உயிர்ப்பாகப் பாயும்
5. ஒரு தனியான சுருக்கத்தின்போது சோணையறையில் இருந்து குருதி பம்பப்படுவது அடிப்புக்கனவளவு

37. மனித சுவாசத் தொகுதி தொடர்பான **தவறான** கூற்றைத் தெரிவு செய்க

1. அது இரண்டு கூம்புவடிவான நுரையீரல்களைக் கொண்டது
2. விழுங்கும் போது குரல்வளை கீழ்நோக்கி அசையும்
3. இரண்டு சுவாசக் குழாகளைக் கொண்டது ஒவ்வொன்றும் சுவாசச் சிறுகுழாய்களை நோக்கிச் செல்லும்
4. வெளிச்சுவாச வளி குரல்நாண்களை அதிரச்செய்யும்
5. இடது நுரையீரல் இரண்டு சோணைகளை உடையது சற்றுச் சிறியது

38. நீர்ப்பீடனம் தொடர்பாக **தவறான** கூற்று எது?

1. உள்ளார்ந்த நீர்ப்பீடனம் அகத்திற்குரிய, புறத்திற்குரிய பாதுகாப்பை வழங்கும்
2. புறத்திற்குரிய பாதுகாப்புடன் சுரப்புக்கள், சீதமென்சவ்வு, மனிதத் தோல் தொடர்புடையவை
3. கிஸ்ரமின் குருதி மயிர்க்குழாய்களின் உட்புகவிடும் இயல்பை அதிகரிக்கும்
4. உயிர்ப்பாக்கப்பட்ட தின்குழியங்கள் சைற்ரோகைனினை விடுவித்து தொற்று ஏற்பட்ட இடங்களில் குருதிப்பாய்ச்சலை அதிகரிக்கும்
5. நிணநீர்க்குழியங்கள் அவற்றின் மென்சவ்வில் வேறுபட்ட வகையான பிறபொருளாக்கிகளை (antigens) கொண்டவை

39. உடலெதிரிகள் (antibodies)

1. பிறபொருளாக்கிகளுடன் இணையும் பிளாஸ்மாக்கலங்களால் சுரக்கப்பட்ட புரதங்கள்
2. பிறபொருளெதிரிகள் தொட்சின்களை உயிர்ப்படையச் செய்யும்
3. பிறபொருளெதிரிகள் நேரடியாக நோயாக்கிகளைக் கொல்லும்
4. பிறபொருளெதிரிகள் Y வடிவக் கட்டமைப்பை கொண்டிருக்காதவை
5. பிறபொருளெதிரிகள் பிறபொருளாக்கிகளுக்கு தனித்துவமற்றவை



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

40. மனித சிறுநீரகம் தொடர்பான **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.

1. குழலுருவிற்குரிய சுரத்தல் குருதி PH ஐ சாதாரண நிலையில் பேணுவதற்கு அவசியமாகிறது
2. வடிதிரவத்தின் $HCO_3^-$ இன் மீள் அகத்துறிஞ்சல் PH சமநிலை பேணுவதில் பங்களிப்புச் செய்கிறது.
3. சேய்மையான மடிந்த குழலுருப் பகுதியில் $K^+$ வடிதிரவத்தினுள் சுரக்கப்படுகிறது.
4. ஒருசீர்திடநிலையில் வெப்பநிலையைப் பேணுவதற்கு அது வெப்பத்தை உற்பத்தி செய்கிறது
5. அது குருதி கனவளவு, அமுக்கத்தை பேணும் பிரதான அங்கம்

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது/ ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது/ எவை சரியானவை என முடிவு செய்க. பின்னர் பொருத்தமான இலக்கத்தைத் தெரிந்தெடுக்க.**

A, B, D ஆகியன மாத்திரம் சரியானவை எனின் ........................................ 1
A, C, D ஆகியன மாத்திரம் சரியானவை எனின் ........................................ 2
A, B ஆகியன மாத்திரம் சரியானவை எனின் ........................................ 3
C, D ஆகியன மாத்திரம் சரியானவை எனின் ........................................ 4
வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரி எனின் ................................ 5

பொழிப்பாக்கிய பணிப்புரைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| A, B, D சரியானவை | A, C, D சரியானவை | A, B சரியானவை | C, D சரியானவை | வேறுவிடை அல்லது விடைகளின் சேர்க்கை சரி எனின் |

41. பின்வருவனவற்றுள் எது / எவை சில உயிரியலுக்குரிய சரியான ஒழுங்கமைப்பு மட்டங்களைக் குறிக்கிறது/குறிக்கின்றன.

(A) DNA, கரு, தசைநார், வட்டத்தசை, இரைப்பை
(B) காகம், காகங்களின் கூட்டம், பறவைகளின் கூட்டம், வீட்டுத் தோட்டம், உயிர்க்கோளம்
(C) நரம்பு நாருறை, வெளிக்காவு நரம்பு முளை, நரம்புக்கலம், மூளை, நரம்புத்தொகுதி
(D) அமினோஅமிலங்கள், அகமுதலுருச் சிறுவலை, நடுநிலை நாடிகள், குருதிக்கலன்கள், குருதி
(E) தேரை, அம்பிபியா, கோடேற்றா, அனிமாலியா, இயூக்கரியா.

42. பின்வருனவற்றுள் எது / எவை இழையுருப்பிரிவின் முக்கியத்துவம் / முக்கியத்துவங்கள்

(A) இலிங்கமுறை இனப்பெருக்கமடையும் இனங்களில் நிறமூர்த்த எண்ணிக்கையை மாறிலியாகப் பேணல்
(B) பாரம்பரிய உறுதிநிலையைப் பேணல்
(C) புதிய பாரம்பரிய மாறலை உருவாக்குதல்
(D) கலப் புதுப்பித்தல்
(E) கூர்ப்புக்கு இட்டுச் செல்லல்



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

43. இயூகரியோட்டா கலத்தின் ஒட்சியேற்ற பொஸ்பொரிலேற்றத்தின் போது நடைபெறும் நிகழ்வு/ நிகழ்வுகளைத் தெரிவு செய்க.

(A) துணைநொதியங்களின் தாழ்த்தல்

(B) மூலக்கூற்று ஒட்சிசனால் ஐதரசன் ஏற்கப்படல்

(C) இலத்திரன் காவிகளினூடாக இலத்திரன்கள் கடத்தப்படல்

(D) மூலக்கூற்று ஒட்சிசனால் இலத்திரன்கள் ஏற்கப்படல்

(E) ATP பயன்படுத்தப்படல்

44. ஒளிச்சுவாசம் தொடர்பான **தவறான** கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(A) $CO_2$ ஒட்சிசனேசை நிரோதிக்கும்

(B) $CO_2$ உம் $O_2$ உம் போட்டியுள்ள நிரோதிகள்

(C) $O_2$ கரைதிறன் வெப்பநிலை அதிகரிப்புடன் அதிகரிக்கும்

(D) உயர்வெப்பநிலை தகைப்பை வெற்றிகொள்வதற்கான தாவரங்களிற்கு ஒரு பிரதிகூலமாக அமையும்

(E) பொஸ்போகிளைக்கோலேற்று தாவரங்களுக்கு நச்சுத்தன்மையானது

45. *Lycopodium* இன் சரியான சிறப்பியல்புகளைத் தெரிவு செய்க

(A) வித்தித்தாவரம் ஆட்சியானது

(B) அது ஓரின வித்திகளை உருவாக்கும்

(C) அது சவுக்குமுளையற்ற ஆண்புணரிகளை உருவாக்கும்

(D) கருக்கட்டலுக்கு புறநீர் அவசியம்

(E) வித்தித்தாவரம் கலனிழையங்கள் அற்றது

46. இருவித்திலைத் தாவர தண்டின் துணைவளர்ச்சி தொடர்பான **தவறான** கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(A) தக்கை மாறிழையத்திற்கு உட்புறமாக தக்கைக் கலங்களை உருவாக்கும்

(B) கலன்மாறிழையம் முதலுரியத்தை நோக்கி துணைக்காழை சேர்ப்பிக்கும்

(C) கலன்மாறிழையத்திற்கு வெளிப்பறமான இழையங்கள் யாவற்றையும் உள்ளடக்கியது மரவுரி ஆகும்.

(D) வைரமான பல்லாண்டுக்குரிய இருவித்திலைத் தாவர தண்டுகளில் நடைபெறும்

(E) கலன்மாறிழையம் முதல் காழை நோக்கி துணைக்காழை சேர்ப்பிக்கும்

47. மனித சதையி தொடர்பான **தவறான** கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(A) புறஞ்சுரக்கும் பகுதி பெரிய சோணைகளைக் கொண்டிருக்கும்

(B) சதையி ஒரு அகஞ்சுரப்பிக்குரியதும், புறஞ்சுரப்பிக்குரியதுமான சுரப்பியாகும்

(C) புறஞ்சுரக்கும் பகுதி ஓமோன்களைச் சுரக்கும்

(D) மனித உடலின் இரண்டாவது பெரிய அங்கமாகும்

(E) சதையி ஓமோன்களை உருவாக்கும், அனைத்தும் உற்பத்தியின் போது உயிர்ப்பானவை



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

48. மனித சுவாசத்தின் ஒருசீர்திடநிலை கட்டுப்பாடு தொடர்பான சரியானது எது/ எவை

(A) அது இச்சையின்றிய பொறிமுறை மூலம் ஒழுங்காக்கப்படும்

(B) நீள்வளையமையவிழையம் சுவாசச் சந்தத்தை ஒழுங்காக்கும்

(C) நீள்வளையமையவிழையத்திலுள்ள உணரிகள் PH வீழ்ச்சியை உணரும்

(D) சுவாசக் கட்டுப்பாட்டு மையத்தில் ஒட்சிசன் மட்டம் குறைந்த செல்வாக்கைச் செலுத்தும்

(E) பொன்ஸ் (வரோலி) சுவாச ஒழுங்காக்கத்தைச் சீராக்கும்

49. சிறுநீர் உற்பத்தி தொடர்பான **தவறான** கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(A) அண்மையான மடிந்த குழலுரு $K^+$அயன்களை மீளகத்துறிஞ்சும்

(B) $HCO_3^-$ மீளகத்துறிஞ்சல் உடல்பாய்பொருளின் PH சமநிலை பேணலில் பங்களிப்புச் செய்யும்

(C) அல்டெஸ்ரரோன் சுரத்தல் நீர்மீளகத்துறிஞ்சலைத் தூண்டும்

(D) ஏறுபுயம் $Na^+$ அயன்களுக்கு உட்புகவிடுமியல்பற்றது

(E) சேய்மைமடிந்த குழலுரு உடல்பாய்பொருள் NaCl செறிவை ஒழுங்காக்கும்

50. அழற்சிதரு தூண்டற்பேறு தொடர்பான **தவறான** கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(A) சமிஞ்சைக்குரிய மூலக்கூறு கிஸ்ரமின் குருதிக்கலங்களின் உட்புகவிடமியல்பை அதிகரிக்கும்

(B) நடுநிலைநாடிகள் குருதியில் இருந்து பாதிக்கப்பட்ட இழையங்களுக்கு அசையும்

(C) நுண்ணங்கி தொட்சின் நரம்புக்கலங்களை பாதிக்கும் போது வலி (pain) ஏற்படுகிறது

(D) உயரும் உடல் வெப்பநிலை தின்குழிய செயற்பாட்டை துரிதப்படுத்தும்

(E) அழற்சிதரு தூண்டற்பேற்றின் துலங்கலாக வீங்குதல், உணர்ச்சி அற்றிருத்தல் ஏற்படும்



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

අ.පො.ස. (උ. පෙළ) විභාගය / G.C.E. (A/L) - 2018
බහුවරණ උත්තර පත්‍රය / M C Q Answer Sheet

Subject :

Index No.

| | | | | |
|---|---|---|---|---|
| 01. ① ② ③ ④ ⑤ | 11. ① ② ③ ④ ⑤ | 21. ① ② ③ ④ ⑤ | 31. ① ② ③ ④ ⑤ | 41. ① ② ③ ④ ⑤ |
| 02. ① ② ③ ④ ⑤ | 12. ① ② ③ ④ ⑤ | 22. ① ② ③ ④ ⑤ | 32. ① ② ③ ④ ⑤ | 42. ① ② ③ ④ ⑤ |
| 03. ① ② ③ ④ ⑤ | 13. ① ② ③ ④ ⑤ | 23. ① ② ③ ④ ⑤ | 33. ① ② ③ ④ ⑤ | 43. ① ② ③ ④ ⑤ |
| 04. ① ② ③ ④ ⑤ | 14. ① ② ③ ④ ⑤ | 24. ① ② ③ ④ ⑤ | 34. ① ② ③ ④ ⑤ | 44. ① ② ③ ④ ⑤ |
| 05. ① ② ③ ④ ⑤ | 15. ① ② ③ ④ ⑤ | 25. ① ② ③ ④ ⑤ | 35. ① ② ③ ④ ⑤ | 45. ① ② ③ ④ ⑤ |
| 06. ① ② ③ ④ ⑤ | 16. ① ② ③ ④ ⑤ | 26. ① ② ③ ④ ⑤ | 36. ① ② ③ ④ ⑤ | 46. ① ② ③ ④ ⑤ |
| 07. ① ② ③ ④ ⑤ | 17. ① ② ③ ④ ⑤ | 27. ① ② ③ ④ ⑤ | 37. ① ② ③ ④ ⑤ | 47. ① ② ③ ④ ⑤ |
| 08. ① ② ③ ④ ⑤ | 18. ① ② ③ ④ ⑤ | 28. ① ② ③ ④ ⑤ | 38. ① ② ③ ④ ⑤ | 48. ① ② ③ ④ ⑤ |
| 09. ① ② ③ ④ ⑤ | 19. ① ② ③ ④ ⑤ | 29. ① ② ③ ④ ⑤ | 39. ① ② ③ ④ ⑤ | 49. ① ② ③ ④ ⑤ |
| 10. ① ② ③ ④ ⑤ | 20. ① ② ③ ④ ⑤ | 30. ① ② ③ ④ ⑤ | 40. ① ② ③ ④ ⑤ | 50. ① ② ③ ④ ⑤ |

No. of correct responses

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**

**மாகாண மட்ட பொதுப் பரீட்சை**
**க.பொ.த. உயர்தரம் –2018– நவம்பர்**

09 T II

**உயிரியல் II** | **தரம் 13 - (2019)** | **3.0 மணி 10 நிமிடம்**

சுட்டெண்............................. பாடசாலை...............................................................

***அறிவுறுத்தல்கள்***

இவ்வினாத்தாள் A,B எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டது

**பகுதி A** அமைப்பக்கட்டுரை

எல்லா நான்கு வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
ஒவ்வொரு வினாவக்கும் விடப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதுக. கொடுக்கப்பட்டுள்ள இடம் உமது விடைகளுக்கு போதுமானது என்பதையும் விரிவான விடைகள் அவசியமில்லை என்பதையும் கவனிக்க.

**பகுதி B**

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. உமக்கு வழங்கப்படும் தாள்களை இதற்கு பயன்படுத்துக.
இவ் வினாத்தாளுக்கென வழங்கப்பட்ட நேர முடிவில் பகுதி A மேலே இருக்கும் படியாக A,B ஆகிய இரண்டு பகுதிகளையும் ஒன்றாக சேர்த்துக் கட்டிய பின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

***பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்***

| பகுதி | வினா எண் | புள்ளிகள் |
|---|---|---|
| | | |
| A | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| B | 5 | |
| | 6 | |
| | 7 | |
| | 8 | |
| | 9 | |
| | 10 | |
| மொத்தம் | | |
| சதவீதம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |
| பொறுப்பாசிரியர் ஒப்பம் | |
| சரிபார்த்தவர் | |
| மேற்பார்வையாளர் | |



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

## அமைப்பு கட்டுரை – A

எல்லா நான்கு வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக

1.A.i. புவியில் உயிர்வாழ்க்கைக்கான நீரின் பிரதான இயல்புகளைக் குறிப்பிடுக

1. .............................................. 3. ......................................

2. ............................................ 4. .......................................

ii. a. இருசக்கரைட்டுக்களில் காணப்படும் குளுக்கோசு தவிர்ந்த இரண்டு எட்சோசுக்களைக் குறிப்பிடுக.

1. ............................................... 2. .......................................

b. இரண்டு பென்ரோசுக்களை பெயரிடுக.

1.......................................... 2. ..............................................

iii. முட்டை அல்பியுமின்னிலுள்ள பெப்ரைட்டு பிணைப்புக்களை அறிவதற்கான பரிசோதனையைக் குறிப்பிடுக.

.................................................................................................

iv. நியுக்கியோரைட்டிலுள்ள மூன்று இரசாயனக் கூறுகளையும் குறிப்பிடுக

.................................................................................................

v. இலிப்பிட்டுக்களின் பிரதான தொழில்களைத் தருக

.........................................................................................................

.........................................................................................................

B.i. பின்வரும் சேதனச் சேர்வைகளின் இனங்காணலுக்கான பிரிசோதனைகளையும், நிறமாற்றங்களையும் தருக

| சேதனச் சேர்வை | பரிசோதனை | நிறமாற்றம் |
|---|---|---|
| 1. புரதம் | ........................................ | ........................................ |
| 2. குளுக்கோசு | ........................................ | ........................................ |
| 3. மாப்பொருள் | ........................................ | ........................................ |

ii. இரன்டு கட்டமைப்புக்குரிய பல்சக்கரைட்டுக்களையும், அவற்றிற்குரிய ஒருபகுதியங்களையும் பெயரிடுக.

| பல்சக்கரைட்டுக்கள் | ஒருபகுதியங்கள் |
|---|---|
| 1. ........................................ | ........................................ |
| 2. ........................................ | ........................................ |

iii. புரதத்தின் அமைப்பழிவு என்றால் என்ன?

.........................................................................................................

.........................................................................................................



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

iv.a. இயூகரியோட்டாக் கலங்களின் இரண்டு பிரதான இயல்புகளைப் பெயரிடுக

1. ................................................ 2. ..........................................

b. அழுத்தமான அகக்கலவுருச்சிறுவலையின் தொகுப்பு தவிர்ந்த இரண்டு தொழில்களைத் தருக.

1. ............................................ 2. ............................................

v. a. குழியவன்கூடு என்றால் என்ன?

..........................................................................................................................

..........................................................................................................................

b. இயூகரியோட்டாக் கலங்களின் குழியவன்கூட்டின் தொழில்களைப் பட்டியற்படுத்துக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

C.i. a. கலச்சந்திப்புக்கள் என்றால் என்ன?

..........................................................................................................................

..........................................................................................................................

b. தாவரக் கலங்களிலுள்ள கலச்சந்திப்பை குறிப்பிடுக.

..........................................................................................

c. மேலே (C.b) இல் குறிப்பிட்டவற்றின் தொழில்களைத் தருக.

.........................................................................................

ii. a. இயூகரியோட்டாக் கலவட்டத்தின் அவத்தைகளைப் பெயரிடுக.

.......................................................................................................................

b. மேலே C. ii. a இல் குறிப்பிட்ட அவத்தைகளில் நீண்ட அவத்தை எது?

.........................................................................................

iii. ஒடுக்கற்பிரிவில் பாரம்பரிய மாறல்கள் ஏற்படுவதற்கான நிகழ்வுகள் மூன்றைப் பெயரிடுக.

1. ............................................................

2. ............................................................

3. ............................................................

iv. இழையுருப்பிரிவு, ஒடுக்கற்பிரிவு இரண்டிற்கும் பொதுவான முன் அவத்தையின் நிகழ்வுகளை பட்டியற்படுத்துக.

..........................................................................................................................

v. ஒடுக்கற்பிரிவின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக.

1. ........................................................ 2. ..........................................



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

2.A.i. a அபசேபம் என்றால் என்ன?

.............................................................................................................

b. கலமொன்றில் நடைபெறும் ATP தொகுப்பு ஒரு உட்சேப நிகழ்வாகும். இயூகரியோட்டா விலங்குக் கலமொன்றில் நடைபெறும் இரண்டு வகையான பொஸ்பொரிலேற்றங்களையும் பெயரிடுக.

1. ....................................................................

2. ....................................................................

ii. நொதியம் என்றால் என்ன?

.............................................................................................................

.............................................................................................................

iii. சேதன துணைக்காரணிகள் துணைநொதியங்களாகும் அவை விற்றமின்களின் பெறுதிகளாகும். இரண்டு துணைநொதியங்களைத் தருக.

1.........................................................................

3. .......................................................................

iv. துணைக்காரணிகள் எவ்வாறு நொதிய நிரோதிகளில் இருந்து வேறுபடுகின்றன.

.............................................................................................................

.............................................................................................................

B.i. காற்றிச் சுவாசம் என்றால் என்ன?

.............................................................................................................

.............................................................................................................

ii. காற்றிச் சுவாசத்தின் பிரதான படிமுறைகளைப் பெயரிடுக.

.............................................................................................................

iii. பின்வரும் காற்றிச் சுவாசத்திற்கான படிமுறைகளில் ஒரு மூலக்கூறு குளுக்கோசு ஒட்சியேற்றமடையும் போது பெறப்படும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கையை தருக.

1. கிரெப்பின் வட்டம் ........................................................

2. இலத்திரன் கடத்தல் தொகுதி ........................................................

iv. a. காற்றின்றிய சுவாசம் என்றால் என்ன?

.............................................................................................................

.............................................................................................................

b. பைருவேற்றில் இருந்து பெறப்படும் விளைபொருட்களின் அடிப்படையில் பல வகையான நொதித்தல் செயல் முறைகள் காணப்படுகிறது. பொதுவாக காணப்படும் இரண்டு நொதித்தல் வகைகளைப் பெயரிடுக.

1. ................................................... 2. ...................................................

C. i. முதலாவது உறுதியான காபன் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழே ஒரு அபசேபச் செயல்முறை காட்டப்பட்டுள்ளது.

a. இப் பொறிமுறையைப் பெயரிடுக ........................................................



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner




b. ஆங்கில எழுத்துக்களால் மேலே குறிக்கப்பட்ட சேதனச் சேர்வைகளை இனங்காண்க.

I. A ....................................... D. ..............................................

B. .......................................

c. P, Q ஆகியவற்றை இனங்காண்க.

P. .............................................. Q. ............................................................

d. கெல்வின் வட்டத்தில் பயன்படும் நொதியம் C யைப் பெயரிடுக.

.........................................................................................................

ii. a. உறிஞ்சல் நிறமாலை என்றால் என்ன?

...................................................................................................................

...................................................................................................................

iii. $C_3$ தாவரங்களின் தைலகொயிட்டு மென்சவ்வில் பகலில் நடைபெறும் நிகழ்வுகளைச் சுருக்கமாகத் தருக.

...................................................................................................................

...................................................................................................................

iv. ஒளிச்சுவாசத்துடன் தொடர்புடைய புன்னங்கங்களைப் பெயரிடுக.

...................................................................................................................

v. ஒளிச்சுவாசத்தை அதிகரிக்கச் செய்யும் காரணிகளைத் தருக.

...................................................................................................................



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

3. A.i.a. அங்கிகளின் கூர்ப்பு என்பதால் கருதப்படுவது யாது?

.............................................................................................................

